சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.7–வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | குட்டியப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் ஈரோடு கதவு எண். எல்.ஐ.ஜி.1 –542 மாணிக்கம்பாளையத்தில் உள்ள ஹவுசிங்யூனிட்டில் வசித்து வருகிறேன். கார்த்திக் டிரைவிங் ஸ்கூல் சென்டர் நாராயணவலசில் வைத்து நடத்தி வருகிறேன். என்னுடைய வீட்டில் இருந்து 500 மீட்டர் தொலைவில் ஈரோடு வடக்கு காவல் நிலையம் அமைந்துள்ளது.

2. ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 25.07.2014 அன்று இரவு சுமார் 8.30 மணி அளவில் இருந்து 9.00 மணி அளவில் ராமசாமி மற்றும் நான் இருசக்கர வாகனத்தில் நசியனூரிலிருந்து ஈரோடில் உள்ள என் வீட்டிற்கு சென்று கொண்டுயிருந்தேன். அப்போது போகும் வழியில் போலீசார் மேற்கண்ட காவல் நிலையம் முன்பு நின்று கொண்டிருந்தார். மேலும் போலீசார் என்னையும் என்னுடன் வந்த ராமசாமியையும் எங்கு போயிட்டு வருகிறீர்கள் என்று கேட்டார் அதற்கு நான் நசியனூர் கோயிலுக்கு சென்று வருகிறோம் என்று கூறினேன்.

3. அதன் பிறகு நானும், ராமசாமியும் காவல் நிலையத்திற்கு உள்ளே அந்த காவலர் அலைத்து சென்றார். மேலும் காவல் நிலையத்தில் 1ம் எதிரியான சிவராமகிருஷ்ணன் வாக்குமூலம் தருகிறார் என்பதால் என்னையும், ராமசாமியையும் சாட்சிகளாக இருக்க போலீசார் கேட்டுக் கொண்டார்கள்.

4. நானும், ராமசாமியும் என்ன காரணத்திற்காக இருவரையும் அழைத்தீர்கள் என்று போலீசாரிடம் கேட்டதற்கு போலீசார் அருண்ராம் என்பவர் 1ம் எதிரியின் மகளை காதலித்துள்ளார், மேலும் அருண்ராமிற்கு 1ம் எதிரியின் மகளை கொடுக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள், அந்த பெண்ணிற்கு வேரு ஒரு நபருடன் திருமணம் செய்துவிட்டதாக சொன்னார்கள். அருண்ராம் என்பவர் தற்கொலை செய்து இறந்துவிட்டார்.
5. மேற்படி அருண்ராம் காதல் தோல்வியால் மனம் உடைந்து தற்கொலை செய்து கொண்டார். மேற்படி 1ம் எதிரி சிவராமகிருஷ்ணன் மேற்படி சங்கதிகளை பொறுத்து என் முன்பும், ராமசாமி முன்பும் போலீசாரிடம் வாக்குமூலம் அளித்தார். மேற்படி 1ம் எதிரி கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் எழுதி பதிவு செய்து கொண்டார்கள். மேலும் மேற்கண்ட பதிவு செய்த வாக்குமூலத்தில் நானும், ராமசாமியும் கையொப்பமிட்டோம்.
6. தற்போது என்னிடம் காட்டப்படும் மேற்கண்ட வாக்குமூலத்தை போலீசார் எழுதி, அதன்பின் வாக்குமூலத்தை என் முன்பும், ராமசாமி முன்பும் தட்டச்சு செய்தார்கள். மேற்கண்ட பதிவு செய்த வாக்குமூலத்தில் நானும், ராமசாமியும் கையொப்பமிட்டோம். 1ம்எதிரி பதிவு செய்த வாக்குமூலத்தில் கையொப்பமிட மறுத்துவிட்டார். எனவே 1ம் எதிரியானவர் கையொப்பமிட மறுத்துவிட்ட காரணத்தினால் என்னிடமும், ராமசாமியிடமும் 2ம் முறையாக மேற்கண்ட பதிவு செய்த வாக்குமூலத்தில் கையொப்பமிட்டோம். மேற்படி 1ம் எதிரி பதிவு செய்த வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான் அது அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. மேலும் காவல் ஆய்வாளர் என் முன்பும், ராமசாமி முன்பும் மேற்கண்ட பதிவு செய்த வாக்குமூலத்தில் கையொப்பமிட்டார். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.